**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-1 | Date : 27.03.2025
Case No. : **O.S.** 04/2019 | Nationality : Indian
Name : லோகநாதன் | Religion :
Father's/Husband's Name : சாரங்கபாணி | Age : 55
Village :
Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.1 இடைமனுவில் கண்ட உத்தரவில் அசல் வழக்கு விசாரணைக்கு போடப்பட்டதால், மனு முடிக்கப்பட்டதாகவும், இடைக்காலமாக வழங்கப்பட்ட உறுத்துக்கட்டளை அசல் வழக்கு முடியும் வரை நீட்டிக்கப்படுவதாகவும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். மேற்படி உத்தரவு இருதரப்பு விசாரணைக்கு பிறகு பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அறிவிப்பில் 1, 2 பிரதிவாதிகள் 5, 6 நபர்களாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் கண்ட 1 முதல் 4 நபர்கள் இவ்வழக்கில் தரப்பினர்கள் கிடையாது என்றால் சரிதான். இடைமனுவில் தரப்பினர்களாக உள்ளார்கள்.

வா.சா.ஆ.10 என்ன ஆவணம் என்றால், ராஜேந்திரன் என் மீதும், எனது சகோதர்கள் மீதும் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு தஞ்சாவூரில் கொடுத்த புகாரின் மீது என்னிடமும், ராஜேந்திரனிடமும் வாக்குமூலம் பெற்றார்கள். அந்த மனு, எனது வாக்குமூலம், ராஜேந்திரன் வாக்குமூலம் மற்றும் ஆய்வாளர் கொடுத்த இறுதியறிக்கை ஆகியவற்றை தகவல் அறியும்

உரிமை சட்டத்தில் பெற்று தாக்கல் செய்துள்ளேன். அதில் எனது வாக்குமூலத்தில் ராஜேந்திரன் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தில் கண்ட சொத்தினை அளந்து எடுத்துக் கொள்வதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் மனு முடிக்கப்பட்டது என்றால் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் அசல் வழக்கு 77/2007, 252/2009 மற்றும் நீதிபேராணை மனு 113/2011 ஆகிய வழக்குகள் நிலுவையில் இருந்த அடிப்பபடையில் புகார் மனு முடிக்கப்பட்டது. மேற்படி இரண்டு அசல் வழக்குகளில் ஒரு வழக்கு இந்த பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான்.

இவ்வழக்கில் முதலில் தடை உத்தரவு வழங்கப்பட்ட பிறகு 29/04/2007 ம் தேதி நான் அவசர அவசரமாக தாவா சொத்திலும், பிரதிவாதிகளுக்கு சொந்தமும் அனுபவத்திலும் இருந்த புல எண். 173/5 பி ல் கண்ட 22 செண்ட் விஸ்தீரணமுள்ள சொத்தையும் சேர்த்து வேலி அடைத்து ஆக்கிரமித்து தென்னங்கன்றுகள் நட்டேன் என்றால் சரியல்ல. அதனால் 29/04/2007 ம் தேதி 1 ம் பிரதிவாதி என்மீது பந்தநல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. அவ்வறு 1 ம் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றாலும் காவல் துறையின் விசாரணையில் பிரதிவாதிகள் நிலத்தை அளந்து எடுத்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்று நான் தெரிவித்ததால் புகார் மனு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு விசாரணை எதுவும் நடக்கவில்லை. நான் காவல் துறையினரிடம் சொன்னவாறு நிலத்தை அளக்க வந்தபோது நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருந்ததால் வருவாய் துறையினர் இடத்தை அளந்து காண்பித்தார்கள் என்றால் எனக்கு தகவல் எதுவும் வரவில்லை. அளக்கவும் இல்லை. வருவாய் துறையினர் முறைப்படி அளந்ததால் தான் அதை பொறுக்காமல் பிரதிவாதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் பெயரில் நீதிமன்ற அவமதிப்பு

அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் முன் அறிவிப்பு கொடுக்காமல் நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவை மீறி அந்த உத்தரவை அவமதிக்கும் வகையில், அத்துமீறி நுழைந்து சொத்தை சேதப்படுத்தியதால் அறிவிப்பு அனுப்பினேன். எனது சகோதரர் மதியழகன் என்பவதை தூண்டிவிட்டு 1ம் பிரதிவாதி மற்றும் பல நபர்கள் பெயரில் பந்தநல்லூர் காவல் நிலையத்தில் பொய்யான புகார் அளிக்க செய்து அதன் பேரில் இந்நீதிமன்றத்தில் பட்டியல் வழக்கு எண்.409/2019 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை முடிவில் எதிரிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதற்கு எதிராக எனது சகோதரர் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளார். அந்த மேல்முறையீடு தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நிலுவையில் தான் உள்ளது. அவ்வாறு நிலுவையில் உள்ளது என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

10/04/2006 ம் தேதி 22 செண்ட் நிலத்தை பிரதிவாதிகள் வாங்கியுள்ளதால் அதற்கு முன்பாக கற்பனையாக 19/04/2004 என தேதியிட்டு ஒப்பந்தம் ஏற்பட்டதாக பொய்யாக ஒரு ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள நான்கு எல்லைகள் தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது சட்டப்படியான அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 06/04/2007 ம் தேதி பிரதிவாதிகள் எனது அனுபவத்தில் குறுக்கிட்டார்கள் என சொல்லி இருப்பது உண்மை இல்லை என்றாலும், வழக்கு தாக்கல் செய்வதற்காக வழக்கு மூலத்திற்காக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

எனது வழக்குரையில் முக்கியமான சங்கதிகளை வேண்டுமென்றே மறைத்து

உள்நோக்கத்துடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI
Date: 2025.04.10 11:02:17 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.